**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 85/2017

Deposition of D.W. 1

Name of the Witness: அழகுராணி

Date : 07.03.2025

***குறுக்கு விசாரணை (வாதி தரப்பில் )***

1. என் தாத்தா பெயர் ராஜகோபால் கவுண்டர். என் தாத்தாவிற்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். என் தாத்தாவின் முதல் மனைவியும் என் அப்பாவின் முதல் மனைவி சின்னபாப்பா கேள்விபட்டேன் நான் அவரை பார்த்ததில்லை. என் தாத்தாவை நான் பார்த்து இருக்கிறேன். என் தாத்தாவின் இரண்டாவது மனைவி பெயர் லட்சுமி அம்மாள். அவரை நான் பார்த்துள்ளேன். அவர்களுக்கு நவீன ராணி, இளவரசன், பிரபு, உத்தமசோழன், பார்த்திபன் வாரிசுகள். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள், என் அப்பாவுடன் சேர்த்து 4 ஆண் மக்கள். அவர்கள் பெயர் என் அப்பா கிருஷ்ணராஜ், சாம் ராஜ், ராஜன், யுவராஜ், என் அப்பாவின் சகோதரிகளின் ஒருவர் பெயர் தனக்கோடி, மற்றவர்கள் பெயர் தெரியவில்லை. தாவா சொத்துக்கள் ராஜகோபால் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் என்றால் இல்லை, அந்த சொத்துக்கள் என் அம்மாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். என் அம்மாவின் அப்பா பெயர் சின்னபைய கவுண்டர். என் அம்மாவின் தாய் வீட்டில் அவருக்கு தாவா சொத்துக்களை கொடுக்கவில்லை. என் தாத்தாவின் கூட பிறந்த பெரியசாமி கவுண்டருக்கு வாரிசுகள் கிடையாது. அதனால் காலி ஜாகவாக இருந்து சொத்தை என் அம்மா மங்கம்மாள், சித்தப்பா சாம் ராஜ், ராஜன், சாமு ராஜ் மனைவி அலுமேலு நான்கு பேரும் பிரித்து 17.10.1967ல் கிரையம் செய்துக்கொண்டார்கள் என்று சொல்லிவிட்டு சாட்சி மீண்டும் பாகம் பிரித்து கொண்டார்கள் என்று கூறுகிறார். பெரியசாமிக்கு சொத்து எப்படி வந்தது என்று எனக்கு சரிவர தெரியாது. பெரியசாமி கவுண்டர் யாருக்கும் பாகம் பிரித்துக்கொடுக்கவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்துக்கள் என் அம்மாவின் பெயரில் உள்ள ஒரே சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. நான் பெரியசாமி கவுண்டரை பார்த்ததில்லை. 14.03.1954ல் நான் பிறந்தேன். என் தாத்தாவின் முதல் மற்றும் இரண்டாவது மனைவி பிள்ளைகள் 1959ல் பாக பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டதை என் அம்மா சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்த்து இருக்கிறேன். அந்த பாக பிரிவினை பத்திரம் கிருஷ்ணராஜ், சாம் ராஜ், ராஜன், யுவராஜ், இளவரசன், பிரபு ஆகியோருக்கு பாகம் ஒதுக்கப்பட்டதாக அந்த பத்திரத்தில் இருந்தது என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் Bசெட்டில் சொத்து என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது. தர்மபுரி பஸ் ஸ்டேன்டில் ஒரு வீடும், நிலமும், மதிகோண்பாளையத்தில் ஒரு சின்ன வீடும் உள்ளதாக என் அம்மா சொன்னார்.

3. 1967 தேதியிட்ட பத்திரத்தை நான் படித்து பார்த்து இருக்கிறேன். அந்த பத்திரத்தில் சொத்துக்கள் பெரியசாமிக்கு பாத்தியப்பட்டது அவருக்கு வாரிசுகள் இல்லை என்பதால் அதை பாகம் பிரித்து கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மங்கம்மாள், ராஜகோபால் மக்கள் சாம் ராஜ், ராஜன், சாம் ராஜ் மனைவி அலமேலு அந்த பாக பிரிவினை பத்திரத்தில் தரப்பினர்கள். நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்றேன். 1959 ல் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்ட நிலையில் ஏன் 1967 ல் பாக பிரிவினை பத்திரத்தில் இரண்டாவது முறையாக ஏன் பாகபிரிவினை செய்யப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டின் கடைசி மகன் ராஜவேலு. 1967 என் உடன் பிறந்தவர்கள் அனைவரும் இருந்தோம். அலமேலுக்கும் அப்போது பிள்ளைகள் இருந்தார்கள். என் அப்பா இறந்துவிட்டதால் என் அம்மாவையும் என் சித்தப்பா சாம் ராஜ் இறந்துவிட்டதால் அவருடைய மனைவி அலமேலுவையும் அந்த பத்திரத்தில் தரப்பினாராக சேர்க்கப்பட்டனர் என்றால் என் சித்தாப்பா அப்போது உயிருடன் இருந்தார். என் அப்பா இறந்துவிட்டதால் என் அம்மாவை அதில் தரப்பினராக காட்டியிருக்கிறார்கள். ஜீவனாம்சத்திற்காக என் அம்மாவை சேர்த்து இருக்கிறார்கள். ஜீவனாம்சத்திற்காக என் அம்மாவை தரப்பினராக சேர்க்கப்பட்டது என்ற வாசகம் அந்த பாக பிரிவினை பத்திரத்தில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த பத்திரத்தில ஜீவனாம்சத்திற்காக என் அம்மாவைவிற்கு சொத்து பிரித்துக்கொடுக்கப்படவில்லை என்றாலும் அந்த ஆவணம்

மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்களில் விஜயா தான் மூத்தவர், அடுத்தது பூங்கொடி ஆகும். எனக்கும் 2ம் பிரதிவாதி பூங்கொடிக்கும் 1 வயது வித்தியாசம். 1967 ல் பெரியசாமி உயிருடன் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1967 பத்திரத்தை பற்றி என் அம்மா எனக்கு சொல்லியிருக்கிறார். என் தாத்தா ராஜகோபால் கவுண்டர் எப்போது இறந்தார் என்று தெரியவாது, அப்போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு சரிவர தெரியவில்லை. 1959 பாகப்பத்திரத்தில் காட்டப்பட்ட B செட்டியூல் சொத்து தான் இந்த வழக்கின் சொத்துக்கள். எனக்கு சுமார் 47 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைப்பெற்றது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)